# பெருநகர சென்னை மாநகராட்சி
## செய்தி வெளியீடு

செ.வெ.எண். 35 நாள்: 13.03.2018

**மாண்புமிகு நகராட்சி நிர்வாகம், ஊரக வளர்ச்சி மற்றும் சிறப்பு திட்டங்கள் செயலாக்கத்துறை அமைச்சர் திரு.எஸ்.பி.வேலுமணி அவர்கள் பெருநகர சென்னை மாநகராட்சி, நகராட்சிகள் மற்றும் சென்னை பெருநகர குடிநீர் வழங்கல் மற்றும் கழிவுநீரகற்று வாரியம் ஆகிய துறைகளில் கருணை அடிப்படையில் பணி நியமனம் பெற்ற 473 பணியாளர்களுக்கு வாழ்த்துக்களை தெரிவித்தார்.**

பெருநகர சென்னை மாநகராட்சி, நகராட்சி நிர்வாகம் மற்றும் சென்னை பெருநகர குடிநீர் வழங்கல் மற்றும் கழிவுநீரகற்று வாரியம் ஆகிய துறைகளில் பணிபுரிந்து பணிக்காலத்தில் காலமான **473 பணியாளர்களின் வாரிசுதாரர்களுக்கு,** கருணை அடிப்படையில், இளநிலை உதவியாளர், வருவாய் உதவியாளர், உதவி வரைவாளர், பணி ஆய்வர், பதிவறை எழுத்தர், அலுவலக உதவியாளர், வார்டு உதவியாளர், ஓட்டுநர், பூங்கா பணியாளர், களப் பணியாளர் போன்ற பணியிடங்களுக்கு பணி நியமன ஆணைகள் வழங்கிடும் அடையாளமாக, **மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு.எடப்பாடி கே.பழனிச்சாமி அவர்களால்** இன்று 16 நபர்களுக்கு தலைமை செயலகத்தில் பணி நியமன ஆணைகள் வழங்கப்பட்டது.

| | | |
|---|---|---|
| ❖ பெருநகர சென்னை மாநகராட்சி | – | 198 |
| ❖ நகராட்சிகள் | – | 214 |
| ❖ சென்னை பெருநகர் குடிநீர் மற்றும் கழிவுநீரகற்று வாரியம் | – | 61 |
| | | =========== |
| மொத்தம் | – | 473 |
| | | =========== |

அதன் தொடர்ச்சியாக, பெருநகர சென்னை மாநகராட்சியில் உள்ள அம்மா மாளிகையில், நடைபெற்ற நிகழ்ச்சியில் **மாண்புமிகு நகராட்சி நிர்வாகம், ஊரக வளர்ச்சி மற்றும் சிறப்புத் திட்டங்கள் செயலாக்கத் துறை அமைச்சர் திரு.எஸ்.பி.வேலுமணி அவர்கள்** மீதமுள்ள வாரிசுதாரர்களுக்கு பணி நியமன ஆணைகள் வழங்கி, அரசு பணியில் சேவையாற்றிட தக்க அறிவுரைகளையும், வாழ்த்துக்களையும் தெரிவித்தார்.

## <u>பெருநகர சென்னை மாநகராட்சி</u>

- பெருநகர சென்னை மாநகராட்சியில், பணிபுரிந்து பணியிடை காலமான பணியாளர்களின் 1261 வாரிசுதாரர்களுக்கு கடந்த 2012–ம் ஆண்டு முதல் 2017–ம் ஆண்டு வரை, பல்வேறு நான்காம் நிலை பதவிகளில் பணியமர்த்தப்பட்டனர்.
    - இவர்களுக்கு, அவர்களின் கல்வித் தகுதிக்கேற்ப பதவி உயர்வும் வழங்கப்பட்டு வருகிறது.
    - பட்டப்படிப்பு முடித்தவர்களுக்கு, இளநிலை உதவியாளர் பதவியிலும், தட்டச்சு முடித்தவர்களுக்கு தட்டச்சர் பதவியிலும் பதவி உயர்வு வழங்கப்படுகிறது.
    - தொழிற்நுட்ப கல்வி முடித்தவர்களுக்கு, உதவி வரைவாளர், இளநிலை / உதவி பொறியாளர் ஆகிய பதவிகளில் பதவி உயர்வு வழங்கப்படுகிறது.
- தற்போது பெருநகர சென்னை மாநகராட்சியில் பணியிடை காலமான பணியாளர்களின் 198 வாரிசுதாரர்களுக்கு
    - செயல்திறன் உதவியாளர், உதவி வரைவாளர், மலேரியா பணியாளர், பூங்காப் பணியாளர், தொழிலாளி, பெண் உதவியாளர், காவலர், பெண் வார்டு உதவியாளர், அறுவை அரங்க உதவியாளர் ஆகிய பதவிகளில் பணி நியமன ஆணை வழங்கப்பட்டுள்ளது.

**நகராட்சிகள்**

- நகராட்சிகளில் பணிபுரிந்து பணியிடை காலமான பணியாளர்களின் வாரிசுதாரர்கள் **558 நபர்களுக்கு,** கடந்த 2011–ம் ஆண்டு முதல் 2016–ம் ஆண்டு (பிப்ரவரி) வரை,
    - இளநிலை உதவியாளர், வருவாய் உதவியாளர், பதிவறை எழுத்தர், ஓட்டுநர், அலுவலக உதவியாளர், பணி ஆய்வர், உள்ளிட்ட பதவிகளில் பணியமர்த்தப்பட்டனர்.
- **தற்போது** நகராட்சிகளில் பணிபுரிந்து பணியிடைகாலமான பணியாளர்களின் **214 வாரிசுதாரர்களுக்கு**
    - இளநிலை உதவியாளர், வருவாய் உதவியாளர், பதிவறை எழுத்தர், ஓட்டுநர், அலுவலக உதவியாளர், பணி ஆய்வர், காவலர், குழாய் திருப்புநர், மகப்பேறு ஆயா போன்ற பதவிகளில் பணி நியமன ஆணை வழங்கப்பட்டுள்ளது.

**<u>சென்னை குடிநீர் வாரியம்</u>**

- சென்னை குடிநீர் வாரியத்தில், பணிபுரிந்து பணியிடை காலமான பணியாளர்களின் வாரிசுதாரர்களுக்கு கடந்த **2011–ம் ஆண்டு முதல் 2017–ம் ஆண்டு வரை மொத்தம் 439 வாரிசுதாரர்களுக்கு** களப்பணியாளர், இளநிலை உதவியாளர் போன்ற மூன்றாம் மற்றும் நான்காம் நிலை பதவிகளில் ஏற்கனவே பணியமர்த்தப்பட்டுள்ளனர்.
    - இவர்களுக்கு, அவர்களின் கல்வித் தகுதிக்கேற்ப பதவி உயர்வும் வழங்கப்பட்டு வருகிறது.
    - பட்டப்படிப்பு முடித்தவர்களுக்கு, இளநிலை உதவியாளர் பதவியிலும், தொழிற்நுட்ப கல்வி முடித்தவர்களுக்கு, அளவையர் மற்றும் வரைவாளர், உதவி பொறியாளர் போன்ற பதவிகளில் பதவி உயர்வு வழங்கப்படுகிறது.
- அதன்படி **தற்போது** சென்னை குடிநீர் வாரியத்தில் பணியிடை காலமான பணியாளர்களின் **61 வாரிசுதாரர்களுக்கு** இளநிலை உதவியாளர், களப்பணியாளர் ஆகிய பதவிகளில் பணி நியமன ஆணைகள் வழங்கப்பட்டுள்ளது.

இந்நிகழ்ச்சியில், நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை முதன்மைச் செயலாளர் திரு.ஹர்மந்தர் சிங், இ.ஆ.ப., பெருநகர சென்னை மாநகராட்சி ஆணையாளர் முனைவர் தா.கார்த்திகேயன், இ.ஆ.ப., நகராட்சி நிர்வாக ஆணையர் திரு.கோ.பிரகாஷ் இ.ஆ.ப., சென்னை பெருநகர குடிநீர் வழங்கல் மற்றும் கழிவுநீரகற்று வாரிய மேலாண்மை இயக்குநர் திரு.சத்தியபிரத சாஹு, இ.ஆ.ப., பெருநகர சென்னை மாநகராட்சி துணை ஆணையாளர் (பணிகள்) திரு.எம்.கோவிந்த ராவ், இ.ஆ.ப., துணை ஆணையாளர் (கல்வி) திருமதி.மகேஸ்வரி ரவிக்குமார், இ.ஆ.ப., துணை ஆணையர் (சுகாதாரம்) திரு.மதுசூதன் ரெட்டி இ.ஆ.ப., துணை ஆணையாளர் (வருவாய் மற்றும் நிதி) திருமதி.ஆர்.லலிதா, இ.ஆ.ப., வடக்கு வட்டார துணை ஆணையாளர் திருமதி எஸ்.திவ்யதர்ஷினி, இ.ஆ.ப., முதன்மை தலைமைப் பொறியாளர் திரு.எம்.புகழேந்தி, நகராட்சி நிர்வாக ஆணையரக கூடுதல் இயக்குநர் உள்ளிட்ட அரசு உயர் அலுவலர்கள், பணி நியமனம் பெற்றவர்களின் பெற்றோர்கள் மற்றும் உறவினர்கள் பலர் கலந்து கொண்டனர்.

**செய்தி வெளியீடு : துணை இயக்குநர் / மக்கள் தொடர்பு அலுவலர்,**
**பெருநகர சென்னை மாநகராட்சி**